சார்பு நீதிமன்றம், மன்னார்குடி

OS 128/2021

20.02.2024

**வா.சா. 1 அருண்மொழி க /பெ. புகழேந்தி அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு 1 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி**

இந்த வழக்கு எத்தனை விஸ்திரணத்திற்காக தாக்கல் செய்துள்ளேன் என்றால் 3 வேலி நிலத்திற்காக தாக்கல் செய்துள்ளேன் அது எத்தனை மா என்று தெரியாது . எத்தனை ஏக்கர் என்றும் தெரியாது. இந்த வழக்கானது எத்தனை அயிட்ட சொத்துகளை கேட்டு தாக்கல் செய்துள்ளேன் என்று தெரியாது . எந்த எந்த சர்வே எண் என்றும் தெரியாது. நிறைய சர்வே எண் இருப்பதால் எனக்கு தெரியாது. நான் இந்த வழக்கிற்கு எந்த விபரமும் சொல்லவில்லை என்றால் ஒரு பத்திரம் என் கைவசம் இருந்தது அதை கொடுத்து வழக்கின் விபரம் சொன்னேன். அது எனது அப்பா பெயரில் இருந்தது. முதலில் சாம்பசிவம் என்ற எனது தகப்பனாரின் தம்பி பெயரில் இருந்தது அவர் எனது அப்பா வெளிநாட்டிலிருந்து வந்தபிறகு சம்மத பத்திரம் எழுதிவைத்திருந்தார் அதை போன்ற பத்திரம் எதுவும் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் செய்யவில்லை. சம்மத பத்திரம் மட்டும் கொடுக்கவில்லை அசல் பத்திரம் கொடுத்தேன். இந்த வழக்கிற்கு எந்த விபரமும் சொல்லவில்லை என்றால் அதனால் இந்த வழக்கு விபரம் தெரியாது என்று சொன்னால் சரியல்ல.

**(1 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது)**

Sd/– திரு. அருண்மொழி

Sd/– திரு. கே. சக்திவேல்,
சார்பு நீதிபதி, மன்னார்குடி.